DINAMALAR

25 APR 2023

PAGE 1

# கடும் போட்டி

## • புதுச்சேரி பல்கலையில் 5 ஆண்டு படிப்புகளுக்கு...
## • 287 சீட்டுக்கு 88,732 விண்ணப்பங்கள் குவிந்தன

புதுச்சேரி, ஏப். 25–

**புதுச்சேரி மத்திய பல்கலையில் உள்ள 10 ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்புகளுக்கு 88,732 விண்ணப்பங்கள் குவிந்ததால் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.**

புதுச்சேரி மத்திய பல்கலையில் இளநிலை, முதுநிலை, பி.எச்.டி., என மொத்தம் 115 படிப்புகள் உள்ளன.

பிளஸ் 2 முடித்த மாணவர்கள் நேரடியாக பல்கலையில் சேர்ந்து படிக்க 10 ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகள் (எம்.எஸ்சி., எம்.ஏ.,) உள்ளன. இந்த படிப்புகளில் மத்திய பல்கலைகளுக்கான 'கியூட்' தேர்வு எழுதினால் மட்டுமே சேர முடியும்.

பல்கலையில் உள்ள 10 ஐந்தாண்டு படிப்புகளுக்கு கடந்த பிப்ரவரி மாதம் 9 ம் தேதி முதல் கடந்த 11ம் தேதிவரை ஆன்–லைனில் விண்ணப்பம் பெறப்பட்டது. நாடு முழுவதில் இருந்து பல்கலையில் குவிந்துள்ள விண்ணப்பங்கள் மலைக்க வைத்துள்ளது.

பல்கலையில் 10 ஐந்தாண்டு படிப்புகளில் மொத்தமுள்ள 287 சீட்டுகளுக்கு 88,732 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 85,477 பேர் விண்ணப்ப கட்டணம் செலுத்தியுள்ளனர். பல்வேறு காரணங்களால் 3,255 பேர் இன்னும் கட்டணம் செலுத்தவில்லை. ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்புகளில் வேதியியல், இயற்பியல், கம்ப்யூட்டர் சயின்ஸ், கணித படிப்பிற்கு அதிகளவில் விண்ணப்பம் குவிந்துள்ளன.

குறிப்பாக, எம்.எஸ்சி., வேதியியல் படிப்பிற்கு 14,872 விண்ணப்பங்களும், எம்.எஸ்சி,, இயற்பியல் படிப்பிற்கு 14,207 விண்ணப்பங்களும், எம்.எஸ்.சி., கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்பிற்கு 12,882 விண்ணப்பங்களும்குவிந்துள்ளன.

ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்புகளுக்கு இந்தாண்டு ஆயிரக்கணக்கில் விண்ணப்பங்கள் குவிந்துள்ளதால் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

**பாட வாரியாக குவிந்துள்ள விண்ணப்ப விபரம்**

| படிப்பு | மொத்த இடம் | விண்ணப்பம் செய்தவர்கள் |
|---|---|---|
| எம்.எஸ்சி.,(அப்ளைடு ஜியாலஜி) | 39 | 4897 |
| எம்.எஸ்சி., (வேதியியல்) | 39 | 14,872 |
| எம்.எஸ்சி., (இயற்பியல்) | 39 | 14,207 |
| எம்.எஸ்சி., (கணிதம்) | 25 | 10,827 |
| எம்.எஸ்சி., (கம்ப்யூட்டர் சயின்ஸ்) | 25 | 12,882 |
| எம்.எஸ்சி., (புள்ளியியல்) | 25 | 4497 |
| எம்.ஏ., (வரலாறு) | 25 | 5325 |
| எம்.ஏ., (அரசியல் அறிவியல்) | 25 | 6710 |
| எம்.ஏ., (சமூகவியல்) | 25 | 4827 |
| எம்.ஏ., (சமூக பொருளாதார நிர்வாக சட்டம்) | 20 | 6433 |

### நுழைவு தேர்வு எப்போது

ஒருங்கிணைந்த ஐந்தாண்டு படிப்புகளுக்கான கியூட் தேர்வு மே 21 முதல் 31 ம் தேதி வரை நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நுழைவு தேர்விற்கான ரிசர்வ் தேதிகளாக ஜூன் 1ம் தேதி முதல் 7 ம் தேதி வரை அறிவிக்கப்பட்டுள்ளன.

கியூட் நுழைவு தேர்வு மையங்கள் குறித்த அறிவிப்பு வரும் 30 ம்தேதி வெளியாக உள்ளது. கியூட் தேர்வினை ஆங்கிலம் மட்டுமின்றி 13 மாநில மொழிகளிலும் எழுத வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஹால் டிக்கெட்டுகளை மே 2ம் வாரத்தில் தேர்வர்கள் டவுன்லோடு செய்து கொள்ளலாம்.

287 சீட்டிற்கு 88,732 விண்ணப்பங்கள் குவிந்துள்ளதால், மாணவர் சேர்க்கைக்கான ஆயத்த பணிகளை துணைவேந்தர் குர்மீத் சிங் உத்தரவின் பேரில்,பல்கலை நிர்வாகம் இப்போதே துவக்கி, பணிகளை வேகப்படுத்தி வருகின்றது.